








We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## DECEMBER

*We Are Here..!! To Guide You..!!*









# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## டிசம்பர் - 08.12.2018

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- நியமனங்கள்
- முக்கிய தினங்கள்












# தமிழக நிகழ்வுகள்

- **ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம்** வெளியிட்டுள்ள **உலக பொருளாதார ஆய்வறிக்கையின்** படி **2019-2023** ஆம் ஆண்டுகளில் **வேகமாக வளரும் இந்திய நகரங்களின் டாப் 10** பட்டியலில் **சூரத் முதலிடத்திலும், ஆக்ரா இரண்டாவது** இடத்திலும் உள்ளது.
    - தமிழகத்தில் திருப்பூர் (6வது இடம்), திருச்சி (9வது இடம்) சென்னை (10வது இடம்) ஆகிய மூன்று நகரங்கள் இடம் பெற்றுள்ளன.

# இந்திய நிகழ்வுகள்

- **ஒடிசா அரசின் பல்வேறு திட்டங்களைப் பற்றி விழிப்புணர்வை** ஏற்படுத்த **"பீத்தா"** (PEETHA – Peoples Empowerment Enabling Transparency and Accountability) என்னும் புதிய முன்முயற்சி திட்டத்தை அம்மாநில அரசு தொடங்கியுள்ளது.

- கர்நாடக மாநிலத்தில் உள்ள **பெங்களூரு மாநகராட்சி பள்ளிகளில் டிஜிட்டல் தொலைக்காட்சி மூலம் கற்பித்தல்** முறையான **"ரோஷினி"** என்னும் திட்டத்தை அம்மாநில அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.
    - இத்திட்டத்தை மைக்ரோசாப்ட் நிறுவனம், துர்தர்ஷன் டிஜிட்டல் தொலைக்காட்சி மூலம் செயல்படுத்துகிறது.

- உள்நாட்டு பாதுகாப்புப் தொழில்துறையின் அறிவுசார் சொத்துரிமைக் கலாச்சாரத்தை **(IPR – Intellectual Property Right)** மேம்படுத்துவதற்காக மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சகம் **"ரக்ஷா கயான் சக்தி"** என்னும் திட்டத்தை தொடங்கியுள்ளது.

- புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் ஆராய்ச்சிகளுக்கான நிதி ஆதாரங்களில் தொழில் நிறுவனங்களின் பங்களிப்பை அதிகப்படுத்தும் நோக்கத்திற்காக **தொழில் நிறுவனம் - கல்வி நிறுவனங்கள் ஒருங்கிணைந்த முதல் மாநாடு மும்பையில்**

WeShine Academy™

நடைபெற உள்ளது.

- இம்மாநாட்டை சென்னை – ஐஐடி நிறுவனம் நடத்த உள்ளது.

## உலக நிகழ்வுகள்

- தென் ஆப்பிரிக்கா நாட்டின் **"தேசிய குற்ற விசாரணை அமைப்பின் முதல் பெண் தலைவராக"** இந்திய வம்சாவளியைச் சேர்ந்த **"ஷமிலா படோஹி"** நியமிக்கப்பட்டுள்ளார்.

- உலக அளவில் **கரியமில வாயு வெளியேற்றம்** தொடர்பான **குளோபல் கார்பன் புராஜெக்ட் ஆய்வில் இந்தியாவானது 7 சதவீதம் கார்பன் வெளியேற்றத்துடன் நான்காவது இடம்** பிடித்துள்ளது.
  - இதில், **சீனா** (27 சதவீதம்) **முதலிடத்திலும், அமெரிக்கா** (15 சதவீதம்) **இரண்டாம்** இடத்திலும் உள்ளது.

## நியமனங்கள்

- **மத்திய அரசின் தலைமைப் பொருளாதார ஆலோசகராக** பேராசிரியர் **"கிருஷ்ண மூர்த்தி சுப்பிரமணியன்"** என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
  - இதற்கு முன் இப்பதவியில் அரவிந்த் சுப்பிரமணியன் என்பவர் இருந்தது குறிப்பிடத்தக்கது.

## முக்கிய தினங்கள்

- இந்தியாவின் **முப்படை வீரர்களின் அரும்பணிகளையும், தியாகத்தையும் போற்றும் வகையில்** ஒவ்வொரு ஆண்டும் **டிசம்பர் 7 ஆம் நாள் தேசிய படை வீரர் கொடி நாளாக** அனுசரிக்கப்படுகிறது.
  - இக்கொடி நாள் **1949** ஆம் ஆண்டு டிசம்பர் ஏழாம் நாள் முதல் இந்தியா முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது.



We Shine Academy™